## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.61/2020

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 25 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.V. பாண்டியன், Bench Clerk(Gr-III)/Incharge அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 25.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜ்குமார் (PW-1) | வயது | : | 43/2025 |
| க/த பெயர் | : | திரு.துரைராஜ் | தொழில் | : | டீ மாஸ்டர் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) தாவா சொத்தை 1ம் பிரதிவாதி 2010 ல் எனக்கு கிரயம் கேட்டகதாக குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எழுதிக் கொடுக்காததால் சொத்தினை ஆக்கிரமித்து விட்டார் என்றால் சரிதான். தாவா சொத்தினை 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்த பின்னர் 2020 ல் இந்நீதிமன்றத்தில் OS.No.22/2020 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியானவர் இந்நீதிமன்றத்தில் OS.No.22/2020 வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரிந்த பின்னர்தான் வசப்பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பிரதிவாதியானவர் இந்நீதிமன்றத்தில் 2014 ல் தாவா சொத்து தொடர்பாக கேவிட் மனு தாக்கல் செய்துள்ளதை நான் தாக்கல் செய்துள்ளேன்.
2) பிரதிவாதியானவர் இந்நீதிமன்றத்தில் 2014 ல் தாவா சொத்து தொடர்பாக பிரதிவாதிக்கு தெரியாமல் எந்த வித பரிகாரமும் நான் கோர கூடாது என கேவிட் மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த கேவிட் மனு தாக்கல் செய்தபின்னர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2014 ல் கேவிட் மனு விபரம் அறிந்தபின்னரும் உடனடியாக வழக்கை தாக்கல் செய்யாமல் 6 ஆண்டுகள் கழித்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.
3) தாவா சொத்து தொடர்பாக 3.02.2017 ல் வழக்கறிஞர் உதயகுமார் மூலம் 1ம் பிரதிவாதிக்கு சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.4 ஆவணம் அனுப்பினேன் என்றால்

சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்தில் 2007 ம் ஆண்டு நான் தஞ்சாவூர் நகரத்திற்கு குடிபெயர்ந்த காரணத்தினால் தாவா சொத்தை அடிக்கடி வந்து பார்த்து பராமரித்து வந்தார் என்றும், நான் வெளியூரில் இருக்கும் வாய்ப்பை பிரதிவாதியானவர் பயன்படுத்திக் கொண்டு தாவா சொத்தை பிரதிவாதியானவர் ஆக்கிரமித்து அனுபவித்து வருவதாக சட்ட அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான்.

4) 2008 ல் தாவா சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்தும் 2017 ல் தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். பிரதிவாதியானவர் தாவா சொத்தை 2008 ல் ஆக்கிரமித்து அதில் என்னென்ன செய்திருந்தார் என்றால் கீத்துக் கொட்டாய் போட்டிருந்தார், பக்கத்தில் அவர் வீடு உள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதியானவர் கீத்துக் கொட்டாய் போட்டிருந்தார், பக்கத்தில் அவர் வீடு உள்ளது என்ற விபரத்தை நிரூபிக்கும் விதமாக ஏதாவது ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

5) தாவா சொத்தை பிரதிவாதியிடம் 21.04.2005 ல் ரூபாய் 17000 க்கு விலை பேசி அன்றைய தினமே ரூபாய் 15000 யை முன் பணமாக பெற்றுக் கொண்டு மீதி பணம் ரூபாய் 2000 யை பெற்றுக் கொண்டு தாவா சொத்தை பிரதிவாதிக்கு எழுதி கொடுப்பதாக சொல்லி சாட்சி முன்னிலையில் வாய்மொழி கிரய ஒப்பந்தத்தை நிறைவேற்றி கையொப்பம் செய்து, அதே தேதியில் தாவா சொத்தின் அனுபவத்தையும் பிரதிவாதியின் வசம் ஒப்படைத்துவிட்டேன் என்றும், மீதி பணம் ரூபாய் 2000 யை பிரதிவாதி என்னிடம் கொடுத்து பத்திரப்பதிவு செய்ய என்னை தேடியபோது நான் ஊரில் இல்லாததால், பத்திரதப்பதிவு செய்ய தாமதம் ஏற்பட்டது என்றும், தாவா சொத்தில் 21.04.2005 அன்றே நான் தாவா சொத்தை பிரதிவாதியிடம் அனுபவம் கொடுத்துவிட்டதால் பிரதிவாதி தாவா சொத்தில் கீத்துக்கொட்டாய வீடு கட்டிக் கொண்டு 21.04.2005 லிருந்து நாளது தேதிவரை தாவா சொத்தை எந்தவித இடையூறும் இன்றி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

6) 21.04.2005 அன்று தாவா சொத்து சம்மந்தமாக வாய்மொழியான கிரய ஒப்பந்தத்தை எழுத்து வடிவில் நிறைவேற்றி கொடுத்துவிட்டேன் என்றும், சிறிது நாள் கழித்து பிரதிவாதியை சந்தித்து தாவா சொத்தின் கிரய ஒப்பந்தத்தை எனது மனைவியுடம் காண்பிக்க வேண்டும் என சொல்லி அந்த ஆவணத்தை வாங்கி சென்ற நான்

திருப்பி தராததால் பிரதிவாதி வாதி மேல் போட்ட அசல் வழக்கு எண்.22/2020 ல் மூல கிரய ஒப்பந்தத்தை பிரதிவாதியால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால் சரியல்ல.

7) தாவா சொத்தை பிரதிவாதியிடம் நான் விற்பனை செய்ததால் தான் பிரதிவாதி தாவா சொத்தை 21.04.2005 அன்றிலிருந்து நான் வழக்கு தாக்கல் செய்யும் தேதிவரை அனுபவம் செய்ததற்கு பிரதிவாதி அனுமதித்தேன் என்றால் சரியல்ல. தற்போது வழக்கிற்காக தாவா சொத்தினை பிரதிவாதிக்கு விற்பனை செய்யவில்லை என்றும் ரூபாய் 15000 யை பெற்றுக் கொண்டு கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியானவர் தாவா சொத்தினை 12 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் செய்து வருவதால் தாவா சொத்தினை வசப்பரிகாரம் கோரி கேட்கும் சட்ட உரிமையை இழந்துவிட்டேன் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தை சேர்ந்த K. கனகசபை என்பவரை தெரியுமா என்றால் தெரியும், தாவா சொத்து அமைந்துள்ள கிராமத்தை சேர்ந்த K. ரமேஷ் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி எனது சொத்தான தாவா சொத்தை ஆக்கிரமித்தது தொடர்பாக காவல் நிலையததில் புகார் கொடுத்தேனா என்றால் ஆக்கிரமித்ததாக கொடுக்கவில்லை, நான் எனது சொத்தை பார்க்க சென்றபோது அடித்ததாக மன்னார்குடி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, போலிசார் அந்த வழக்கை எடுத்துக் கொள்ளவில்லை. எந்த தேதியில் இந்த சம்பவம் நடந்தது என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை 2018 ல் நடந்தது (**தற்போது சாட்சியானர் 2014 ல் நடந்ததாக சொல்லியுள்ளார்**).

9) தாவா சொத்தை நான் பிரதிவாதியிடம் அனுபவத்தில் விட்டுவிட்டதால் பிரதிவாதியானவர் என்னிடம் எந்தவித தகராறு செய்வதற்கான சாத்திய கூறு இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியானவர் எனது சொத்தை ஆக்கிரமித்தது தொடர்பாக அரசு அலுவலர்களுக்கு புகார் கொடுத்தேனா என்றால் திருவாரூர் மாவட்ட ஆட்சியர், திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கொடுத்தேன். மேற்படி புகார் கொடுத்ததற்கான ஆவணத்தை இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் விசாரணை செய்தார்கள்.

10) தாவா சொத்தை நான் பிரதிவாதியிடம் அனுபவத்திற்கு கொடுத்து 12 வருடம் ஆகிவிட்டதால் அவருக்கு எதிரிடை அனுமானம் கிடைத்து விட்டதால் எனக்கு தாவா சொத்தை குறித்து எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.28 17:41:26 +0530

District Munsif
Mannargudi.